# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

**மானியக் கோரிக்கை எண்: 54**

**வனம்**

**அறிவிப்புகள்**
**2013–2014**

**திரு கே.டி. பச்சைமால்**
**வனத்துறை அமைச்சர்**

## சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## 2013–2014 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்

## வனம்

### 1. நீலகிரி மாவட்டத்தில் சோலைக்காடுகள் மற்றும் புல்வெளிகளின் மீட்பு குறித்த மாதிரி சோதனை

நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள இயற்கை சோலைக் காடுகள் மற்றும் புல்வெளி நிலங்கள், சீகை, பன்றிமுள், மிளார் ஆகிய வெளிநாட்டுத் தாவரங்களால் அதிகளவு பாதிக்கப்படுகின்றன. இந்த இடர்பாட்டைக் களைய, மாதிரி சோதனைகள் ஐந்தாண்டு காலத்தில் ரூ.0.50 கோடி செலவில் மேற்கொள்ள **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.



### 2. மன்னார் வளைகுடா உயிர்கோள் காப்பக கடலோர உயிர்பன்மைப் பாதுகாப்பு மற்றும் நிலைத்த பயன்பாட்டிற்கு நிதி உதவி

2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மன்னார் வளைகுடா உயிர்கோள் காப்பகத்தின் கடலோர உயிர்பன்மைப் பாதுகாப்பு திட்டத்திற்கான சர்வதேச சுற்றுச்சூழல் வசதியமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்ட நிதியுதவி முடிவுற்றது. இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்ட கடலோர பாதுகாப்பு நடவடிக்கைகளினால் எய்தப்பட்ட முன்னேற்றங்களின் நிலைத்த பயன்பாட்டிற்கு நிதியுதவி அவசியமாகிறது. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க **2013–14** ஆம் ஆண்டில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் மன்னார் வளைகுடா கடல் உயிர்கோள் காப்பக அறக்கட்டளையின் மூலம் உயிர்பன்மைப் பாதுகாப்பு நடவடிக்கைகளான உயிர்பன்மை மதிப்பீடு, திறன் வளர்த்தல், உயிர்வாழ் தொடர்பயன்பாட்டு பணிகள் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 3. வனத்துறையிலுள்ள சட்டப் பிரிவினைப் பலப்படுத்துதல்

மாநிலத்தில் வன நிர்ணயம் மற்றும் வன நில ஆக்கிரமிப்பு தொடர்பான பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளதென்று குறிப்பிட்டு, பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளை உரிய முறையில் நடத்தி செல்வதற்கும், துல்லியமாக கண்காணிக்கவும், உரிய தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, வனத்துறையில் உள்ள சட்டப் பிரிவினை பலப்படுத்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி வழக்குரைஞர் (சிவில் வழக்குகள்) 2 பதவிகளும், வழக்குரைஞர் (குற்ற வழக்குகள்) 1 பதவி ஆகிய 3 புதிய பதவிகள் தோற்றுவிக்கப்படும். 2013–14 ஆம் ஆண்டில், புதிதாக தோற்றுவிக்கப்படும் பதவிகளுக்கான தொடர் செலவினம் ரூ. 0.15 கோடியாகும்.



## 4. வேட்டைத் தடுப்பு காவலர்களுக்கு உயர்த்தப்பட்ட மாதாந்திர ஊதிய ஒப்பளிப்பு வழங்குதல்

உள்ளார்ந்த காடுகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் வேட்டைத் தடுப்பு முகாம்கள் செயல்படுவதால் வேட்டையாடுதல் மற்றும் திட்டமிட்ட கடத்தல் ஆகியவை கணிசமான அளவில் தடுக்கப்பட்டுள்ளது. இவ்வகை வேட்டை தடுப்புக் காவலர்களுக்கு தற்போது ரூ.4000/– வீதம் மாதாந்திரத் தொகுப்பு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. குறைந்தபட்சக் கூலி அடிப்படையிலும் இக்காவலர்களின் கடினமான உழைப்பின் தன்மையையும் கருத்தில் கொண்டு, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க 2013–14 ஆம் ஆண்டில், 908 வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்கு மாதாந்திரத் தொகுப்பு ஊதியமாக ரூ.6750/– உயர்த்தி வழங்கப்படும்.

## 5. வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் பணியாற்றும் பணியாளர்களுக்கு இடர்படி மற்றும் ஊக்கத்தொகை ஒப்பளித்தல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி வண்டலூர் உயிரியல் பூங்காவில் பழக்கப்படுத்தப்பட்ட வனஉயிரினங்களை கையாளுதல் தொடர்பான மிக அபாயகரமான பணிகளை மேற்கொண்டுவரும் 175 வனஉயிரினப் பூங்காப் பணியாளர்களின் பணியினை கருத்தில் கொண்டு 2013–14 ஆம் ஆண்டில் ஒரு பணியாளருக்கு மாதம் ரூ.270/– வீதம் மொத்தத்தில் ரூ.0.06 கோடி செலவில் இடர்படி வழங்கப்படும். மேலும் இவ்வுயிரியல் பூங்காவில் பணியாற்றும் 257 பணியாளர்களுக்கு அடிப்படை ஊதியம் + தர ஊதியத்தில் 10 விழுக்காடு ஊக்கப்படியாக மொத்தம் ரூ.0.32 கோடி செலவில் வழங்கப்படும்.



## 6. வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வனம் மற்றும் வனஉயிரின அருங்காட்சியகம் ஏற்படுத்துதல்

பார்வையாளர்களிடையே வனம் மற்றும் வனஉயிரினங்கள் குறித்த விழிப்புணர்வினை அதிகரிக்க **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி 2013–14 ஆம் ஆண்டில் ரூ.0.20 கோடி செலவில் வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில், பதப்படுத்தப்பட்ட தாவரங்கள் மற்றும் பூச்சிகள், வரலாற்று புகைப்படங்கள், மண் அருங்காட்சியகம் மற்றும் வனஉயிரின கலைப்பொருட்கள் உள்ளடங்கிய ஒரு வனம் மற்றும் வனஉயிரின அருங்காட்சியகம் ஏற்படுத்தப்படும். இந்த அருங்காட்சியகம் அறிவியல், கலை, கலாச்சாரம் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களின் சேகரிப்பு கூடமாக ஏற்படுத்தப்பட்டு, பொதுமக்கள் பார்வைக்கு அனுமதிக்கப்படும்.

**7. தமிழ்நாட்டிலுள்ள சிறிய வன உயிரின பூங்காக்களை மேம்படுத்துதல்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி 2013–14 ஆம் ஆண்டில் மாநிலத்தில் உள்ள சிறிய வனஉயிரின பூங்காக்களான, அமிர்தி (வேலூர் மாவட்டம்) மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள சிறிய வனஉயிரினப் பூங்காக்கள் ரூ.5.00 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

**கே.டி. பச்சைமால்**
**வனத்துறை அமைச்சர்**